என்று காண்போம்? தலைவா உன்னை!

எங்கே? எங்கே? எங்கே நீ?என
இதயம் விம்மித் துடிக்கின்றதே!
என்று காண்போம் இனிமேல் உன்னை?
எங்கள் நெஞ்சம் வெடிக்கின்றதே!
மங்காப் புகழின் மாபெரும் தலைவா!
மழலையும் கண்ணீர் வடிக்கின்றதே!
மறுநாள் விடியல் நீயில் லாமலா?
மனதில் பித்துப் பிடிக்கின்றதே!

சாயா தெழுந்த சரித்திர மே,உன்
சங்க நாதக் குரல்எங்கே?
தாளும் கோலும் தேயத் தேயத்
தத்துவம் தீட்டிய விரல்எங்கே?
ஓயா துழைத்த தலைவா! எங்கள்
உயிர்நீ சென்ற வழிஎங்கே?
உயிரினும் மேலான உடன்பிறப் பே!என
ஒலிக்கும் அந்த மொழிஎங்கே?

தூய கருப்புக் கண்ணா டிக்குள்
துளைக்கும் பார்வை ஒளிஎங்கே?
தோள்கள் இரண்டும் சிலிர்க்க, மஞ்சள்
துண்டு தவழும் எழில்எங்கே?
தாயைப் போலும் நெஞ்சினில் அன்பு
ததும்பும் பாசப் பொழிவெங்கே?
தமிழால் முக்கனி விருந்து படைத்த
தலைவா! இலக்கியப் பிழிவெங்கே?

மேடை அனைத்தும் தேடு கின்றன!
வீரன் உன்முகம் பார்ப்பதற்கு!
மேவும் திசைகள் ஆவல் கொண்டன!
வெண்கலக் குரலைக் கேட்பதற்கு!
ஏடுகள் யாவும் வாடு கின்றன!
எழுத்தை அச்சில் கோப்பதற்கு!
ஏங்கு கின்றதே காலம்! உன்போல்
இன்னொரு மேதை வாய்ப்பதற்கு!

கவிச்சுடர்
கவிதைப்பித்தன்.

உச்ச நீதிமன்ற தீர்ப்பைத் தொடர்ந்து ராகுலுக்கு

உடனடியாக எம்.பி. பதவி தர வேண்டும்!

காங்கிரஸ் வலியுறுத்தல்!

புதுடெல்லி,ஆக.7-

உச்ச நீதிமன்ற தீர்ப்பைத் தொடர்ந்து, ராகுலின் எம்பி பதவி மீண்டும் வழங்கப்பட வேண்டுமென காங்கிரஸ் வலியுறுத்தி உள்ளது. பிரதமர் மோடி குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசிய வழக்கில் ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட 2 ஆண்டு சிறை தண்டனையை உச்ச நீதிமன்றம் நிறுத்தி வைத்து தீர்ப்பளித்தது. இந்நிலையில், ராகுலின் பறிக்கப்பட்ட எம்பி பதவியை உடனடியாக வழங்க வேண்டுமென காங்கிரஸ் வலியுறுத்தி வருகிறது.

இது குறித்து மக்களவை காங்கிரஸ் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி நேற்று கூறியதாவது:

உச்ச நீதிமன்ற தீர்ப்பை தொடர்ந்து வெள்ளிக்கிழமை பகல் 2.05 மணிக்கு மக்களவையில் ராகுலின் எம்பி பதவியை உடனடியாக மீண்டும் வழங்க வேண்டுமென வலியுறுத்தினேன். பின்னர் மக்களவை சபாநாயகரின் வீட்டிற்கு சென்று முறையிட்டேன். அன்று இரவும், அடுத்த நாள் காலையிலும் சபாநாயகரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினேன். அப்போது அவர் அனைத்து ஆவணங்களையும் மக்களவை பொதுச் செயலாளரிடம் வழங்குமாறு கூறினார்.

சனி, ஞாயிறு விடுமுறை என்பதால் கடிதம் மூலமாக ஆவணங்களை அனுப்புமாறு அவை பொதுச் செயலாளர் கூறினார். அதன்படி ஆவணங்களை ஒப்படைத்து விட்டோம். ஆனால் எந்த ரசீதும் தரவில்லை. இந்த விஷயத்தில் யாரையும் குறை கூற விரும்பவில்லை. சபாநாயகர் மீது மிகுந்த மரியாதை வைத்துள்ளோம். எனவே ராகுலின் பறிக்கப்பட்ட எம்பி பதவி, திங்கட்கிழமை அவை கூடுவதற்கு முன்பாக வழங்கப்படும் என நம்புகிறோம். எம்பி பதவி பறிக்கப்பட்டதை போலவே உடனடியாக திருப்பி தரப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

பயப்படுகிறாரா மோடி?

காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் டிவிட்டரில், "ராகுலுக்கு சூரத் நீதிமன்றம் தண்டனை விதித்த 26 மணி நேரத்தில் அவர் எம்பி பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார். ஆனால் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்து 26 மணி நேரம் கடந்து விட்டது, இன்னும் எம்பி பதவி திருப்பித் தரப்படவில்லை. நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான விவாதத்தில் ராகுல் பங்கேற்பது குறித்து பிரதமர் மோடி பயப்படுகிறாரா? உச்ச நீதிமன்றம் தண்டனையை நிறுத்தி வைத்ததன் மூலம், ராகுல் நாடாளுமன்றத்தில் பங்கேற்க அனுமதிக்கப்பட வேண்டும்" என்றார்.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில்

சாலை சீரமைப்புப் பணிகள்!

ஆணையர் ஜெ. ராதாகிருஷ்ணன் ஆய்வு!

சென்னை,ஆக.7-

பெருநகர சென்னை மாநகராட்சி, வளசரவாக்கம் மற்றும் ஆலந்தூர் மண்டலங்களில் பிற துறை களுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் சாலை சீரமைப்பு பணிகளை கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் ஜெ.ராதாகிருஷ்ணன், நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, வளசரவாக்கம் மண்டலம், திருவள்ளுவர் சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை சீரமைப்பு பணிகளையும், மழைநீர் வடிகால்கள் மற்றும் மழைநீர் வடிந்து செல்லும் வகையில் வண்டல் வடிகட்டித் தொட்டிகள் அமைக்கும் பணிகளையும் கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், நேற்று (05.08.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு பணிகளை விரைவாகவும், தரமாகவும் முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் 5 ஆம் ஆண்டு நினைவு நாள் பேரணி!

ஈரோடு தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை

ஈரோடு, ஆக. 7 -

ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான சு.முத்துசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு

தகைமைசால் தலைவராக எழுத்தாளராக கவிஞராக சொற்பொழிவாளராக திரைக்கதை வசனகர்த்தாவாக இலக்கியவாதியாக திரைப்படத் தயாரிப்பாளராக தலைச்சிறந்த நிர்வாகியாக தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி, பின்னர் காஞ்சி தந்த காவியத்தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்ற கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முனேற்றக் கழகத்தின் தலை

வராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக்கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 5வது நினைவுநாளினையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்கள் அறிவிப்புக்கிணங்க அமைதிப் பேரணி ஆகஸ்ட் 7. திங்கட்கிழமை அன்று மாலை 4 மணிக்கு ஈரோடு பன்னீர் செல்வம் பூங்கா முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலை அருகில்ருந்து புறப்பட்டு, மணிகூண்டு, சக்தி ரோடு பேருந்துநிலையம், மேட்டூர் ரோடு, வழியாக முனிசிபல் காலனி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பேரணி நிறைவு பெறுகிறது.

எனவே, மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள், ஊர் கிளை கழக நிர்வாகிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், உள்ளாட்சி, கூட்டுறவு சங்க பிரதிநிதிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவேந்தல் பேரணியில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில்

காஞ்சி மாநகரில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவுநாள் அமைதிப் பேரணி!

கழகத்தினர் அனைவரும் பங்கேற்றிட மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஆக. 7 -

தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் காஞ்சி மாநகரில் மாபெரும் அமைதி பேரணி நாளை (7.8.2023) காலை நடைபெறுகின்றது. இந்த அமைதிப்பேரணியில் மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முழுமையான பங்களிப்பை அளித்தவர் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான், அவரது ஆட்சி ஏழை எளிய மக்களுக்கு பொற்கால ஆட்சியாகத் திகழ்ந்தது, சிறுபான்மை மக்களுக்கு மேன்மை தங்கிய ஆட்சியாகத் திகழ்ந்தது. நடுத்தர மக்களுக்கு நலம் பயக்கும் ஆட்சியாக விளங்கியது.

விவசாயிகளுக்கு நன்மை தரும் ஆட்சியாக, மாணவர்களுக்கு கல்வித் தரும் ஆட்சியாக, பிற்படுத்தப்பட்டோர், பட்டியலின மக்களை கை தூக்கி விடும் ஆட்சியாக விளங்கியது. குறிப்பாக இந்தியாவிலேயே விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியது, விவசாயிகளின் கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு இலவச நிலம், கை ரிக்ஷா ஒழிப்புத் திட்டம், கண்ணொளி வழங்கும் திட்டம், பிச்சைக்காரர்கள் மறு வாழ்வு திட்டம், அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் சட்டம், தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம், பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகம், ரேஷன் கடைகளில் குறைந்த விலையில் மளிகை பொருட்கள் விற்பனை, ரேஷன் கடைகளில் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் வழங்கி, இன்றைக்கு இலவச அரிசி வழங்கப்படுகிறது என்றால் அதற்கு கலைஞர் அவர்களின் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கி வித்திட்டதே காரணம்.

மகளிர் மகப்பேறு நிதி உதவித் திட்டம், கலைஞர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், மாணவ, மாணவியர்களுக்கு இலவச கல்வித் திட்டம், மருத்துவ இன்ஜினியரிங் படிப்புக்கான நுழைவுத் தேர்வு ரத்து என்று அப்பப்பா எத்தனை எத்தனை திட்டங்கள். அவரது அடி யொற்றி கழகத் தலைவர் நமது முதல்வர் மு.க.ஸ்டலின் அவர்கள் தற்போது மகளிர்க்கு இலவச பேருந்து திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் என்று மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் வழங்கும் திட்டம், கல்லூரி மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டம் என்ற பெயரில் மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் வழங்கும் திட்டம் என்று கலைஞர் வழியில் தமிழ்நாட்டின் நலனுக்கு, தமிழ் மக்களின் நலனுக்கு பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார்.

தமிழ் நாட்டு முன்னேற்றத்திற்காக கண்துஞ்சாமல் உழைத்துக் கொண்டிருக்கும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, தமிழினத் தலைவர்முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நாளை (7.8.2023) காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் முழுவதும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, வட்ட, ஊராட்சி கிளைக் கழக அலுவலகங்களில் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி கலைஞர் அவர்களின் புகழ் ஓங்கச் செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் காஞ்சிபுரம் மாநகரில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5-ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாளை (7.8.2023-திங்கள்கிழமை) காலை 7 மணிக்கு, காஞ்சிபுரம் தந்தை பெரியார் தூண் (காந்தி ரோட்டில்) அருகில் இருந்து என் (மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ.) தலைமையில் மாபெரும் அமைதிப் பேரணி துவங்கி டி.கே. நம்பி தெருவில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகம் பவள விழா மாளிகையில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருநெல்வேலி
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.22/2023–2024/வ1/நாள்–04.08.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருநெல்வேலி வட்டம் அவர்களால், **திருநெல்வேலி (நெ), க(ம)ப கோட்டம்** சார்ந்த **சி.ஆர்.ஐ.டி.பி 2023–24 (2 வேலைகள்) திட்டப்பணிக்கு** இணையவழியில் மட்டுமே **இரு உறை முறையில்** சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **30.08.2023–14.00 மணிவரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **14.08.2023 முதல்** தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ/4336/ஒப்பந்தப்புள்ளி/2023

கண்காணிப்புப் பொறியாளர் (நெ)
க(ம)ப வட்டம், திருநெல்வேலி

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

ஞாலமெலாம் நின்புகழே; நாளெலாம் நின்நினைவே!

ஆயிரம் ஆண்டுகள்
ஆனாலும் அய்யனே,
ஞாயிறு போல்ஒளி
நல்குவாய் மெய்யனே!
கோயிலும் கடவுளும்
கொடியவர் கூடாரம்
ஆயிடக் கூடாதென்று
அனலுரை எழுப்பியே
பாயிரம் தீட்டிய
பகுத்தறிவுப் பெரியாரின்
தீயினும் வெவ்விய
செஞ்சுடர்க் கதிரவனே!
தாயினும் பரிவுடன்
தாங்கிய அண்ணாவை
மேவிய தம்பியருள்
மேலான தம்பியே!
ஆவியாய் உடன்பிறப்பை
அணைத்திடும் தமையனே!
சேயினும் அன்பாகச்
செந்தமிழ் நாட்டினை
ஓயினும் ஓயாமல்
உயர்த்திய புரவலனே!
காயினும் பிறருன்னைக்
கனிவாகப் பொழிந்தவனே!
மாயினும் மாயாமல்
மக்களிடம் எழுந்தவனே!
தேயினும் தேயாத
செந்தமிழ்த் தலைவனே!

ஓயாமல் நாடெங்கும்
உரையாற்றிக் கருத்தூற்றிக்
காயாமல் வளர்த்தநற்
கனியான கழகத்தை
நீயாக விட்டுவிட்டு
நீளத்தான் துயில்வதற்குத்
தாயான அண்ணாவின்
சதுக்கத்தில் ஓரிடத்தே
பாயாத புலியாகப்
பாதுகாக்கப் போனாயோ?
நோவாத நெஞ்சுண்டா?
நொறுங்காத மனமுண்டா?
கூவாத நாவுண்டா?
கூடவராக் குரலுண்டா?

வாயாரப் பாடியே
வளரலைகள் தாலாட்டச்
சேயாக நீகேட்டுச்
சென்றாயோ தேடியே!
தீயான உன்னையொரு
சிறையிலே இட்டாலும்
மாயமாய் எங்கெங்கும்
மணம்பரப்பி விடுவாயே!

காயமே பொய்யென்று
கலக்கத்தைக்
கொள்ளாமல்
மாயமே வாழ்வென்று
மயக்கத்தில் குழம்பாமல்
ஆயவே, பகுத்தறிவு
தன்மான அறிவுலகின்
வாயிலைத் திறந்துவிட்டு
வாழ்வினைக் காட்டிய
தூயனே! கடலோரம்
துயில்கின்றாய் என்றுரைத்தால்
மாயந்தான் அதுவன்றோ?
மரணந்தான் உனக்குண்டோ!

அலைகடல் கரையோரம்
அண்ணா உறங்குவதால்
கலைக்கடலே! கழகமெனும்
கவிழாத கப்பலின்
தலைவனே! என்றுமே
தரைதட்டாது இயக்கிய
கலைஞரே! ஒருபோதும்
களைப்பினை அறியாமல்
நிலையாக உழைத்தவனே!
நிறைவேர்வை
உதிர்த்தவனே!
மலையாக உயர்ந்தவனே!
மாக்கடலாய் விரிந்தவனே!
வலையாக விரித்தாலும்
வஞ்சகத்தை அறிந்தவனே!

குலையாத வன்மையும்
குன்றாத கொள்கையும்
அலையாத நெஞ்சமும்
அடங்காத வீரமும்
மலையாத திட்பமும்
மயங்காத நுட்பமும்
கலையாத நெடுங்கனவும்
கலங்காத அறிவுளமும்
குலையாகக் கொண்டவனே!
கோலோச்சி வென்றவனே!

விலையாக உனைக்கொண்ட
விரிந்த ஒரு விண்ணுலகம்
இலையாக எப்படித்தான்
எங்களைவிட்டு
ஏகினையோ?
சிலையாக வடித்துன்னைத்
திக்கெல்லாம் வைத்தாலும்
உலையாகக் கொதிக்கிறதே
உனைக்காண நெஞ்சங்கள்!
தலைகாட்ட மாட்டாயோ
தண்ணிலவாய்க்
கொஞ்சந்தான்!

பேராசிரியர்
மா.செல்வராசன்

அவ்விய நெஞ்சத்தார்
அழுக்காறு கொண்டிங்கே
ஒவ்வொரு சிக்கலும்
உருவாக்கும் போதெல்லாம்
செவ்விய உன்நினைவே
சிந்தையில் எழுகிறது!
கவ்விய புறாவினைக்
காத்த வண் மரபினனே!
எவ்விதம் தீர்ப்பாய்நீ
இலகுவாய் என்றெண்ணி
அவ்விதம் தீர்ப்பதே
அறிவுடைமை என்றியங்கித்
தெவ்வரை வீழ்த்திடும்
திறல்மிகு தளபதியின்
எவ்வொரு செயலிலும்
ஏகுவது உன்நினைவே
கொவ்வைபோல்
சிவந்திடும்;
கோலமாய்ச் சிறந்திடும்!

காலமெலாம் உழைத்ததனால்
களைப்படைந்தாய்
என்றிங்கே
ஓலமெலாம் எழுப்புதற்கு
ஒருவரும் முடியாதே!
நீலவான் நீர்காற்று
நெடும்புனல் சுடுங்கனல்
கோலநிலம் குற்றுடுக்கள்
குளிர்நிலா வளர்கதிர்
சாலவே இருக்குமட்டும்
சரித்திர நாயகனே!
மேலெழும் விண்ணெழும்
மேன்மேலும் விரிந்தெழும்
ஞாலமெலாம் நின்புகழே;
நாளெலாம் நின்நினைவே!